தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-12-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பழங்குடியினருக்கு நூற்புழு மேலாண்மைப் பயிற்சி வழங்கினர்**

அகில இந்திய ஒருங்கிணைந்த நூற்புழு ஆய்வுத்திட்டத்தின்கீழ் பழங்குடியினருக்கான துணைத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நூற்புழுவியல் துறையானது சாடிவயல், சிங்கம்பதி, வெள்ளப்பதி, பொட்டப்பதி ஆகிய பகுதிகளில் வாழும் பழங்குடியினருக்கு 10-12-15 அன்று சாடிவயல் கிராமத்தில் நூற்புழு மேலாண்மைப் பயிற்சி அளிக்கப்பட்டு உரங்கள் மற்றும் உயிரியல் நூற்புழுக் கொல்லிகள் ஆகியவற்றை இலவசமாக வழங்கினர்.

நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பயிர்ப்பாதுகாப்பு மைய இயக்குநர் முனைவர். இராமராசு தலைமை வகித்தார். அவர் தமதுரையில் நச்சுத்தன்மை கொண்ட இராசயன நூற்புழுக்கொல்லிகளைத் தவிர்த்துப் பாதுகாப்பான உயிரியல் நூற்புழுக்கொல்லிகளை உபயோகிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

நூற்புழுவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ச. சுப்ரமணியன் பழங்குடியினருக்கான துணைத்திட்டத்தின் பயன்களைப் பற்றி விளக்கினார்.

அகில இந்திய ஒருங்கிணைந்த நூற்புழு ஆய்வுத்திட்டத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர். பூர்ணிமா மற்றும் முனைவர். கலையரசன், முனைவர். சுவர்ணகுமாரி ஆகியோர் நெல், பருத்தி, மஞ்சள் ஆகிய பயிர்களில் தோன்றும் நூற்புழு நோய்கள் பற்றியும் அறிகுறிகள் மூலம் அவற்றைக் கண்டறிந்து கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் உழவர் விவாதக்குழு அமைப்பாளர் முனைவர். கிருஷ்ணசாமி மற்றும் கிட்டுசாமி ஆகியோர் இவ்விழாவில் பழங்குடி விவசாயிகளுக்கு ஊக்கமளித்து வேளாண் பல்கலைக்கழகத்தின் சேவைகளை உழவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தினர்.

விழாவின் முக்கிய அம்சமாகப் பழங்குடியின விவசாயிகள் **30** பேருக்கு பழங்குடியினர் துணைத்திட்டத்தின் மூலம் உரங்கள், உயிரியல் நூற்புழுக்கொல்லி போன்ற இடுபொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டது. முனைவர் சுவர்ணகுமாரி நன்றியுரை வழங்கினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்